**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons),**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2026 ம் ஆண்டு ஜீன் மாதம் 05–ம் நாள் வெள்ளிக்கிழமை**
**Crl.M.P. No. – 234/2026**

அருண்பாண்டி
த/பெ.பாண்டியராஜ் .....மனுதாரர் /வாகன உரிமையாளர்

**–எதிர்–**

அரசுக்காக காவல் ஆய்வாளர்
திருப்புவனம் காவல் நிலையம்
குற்ற எண்.230/2026 ......எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனு என் முன்னிலையில் இன்று 05.06.2026 ம் தேதி விசாரணைக்காக வந்த போது மனுதாரருக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.மோகனசுந்தரம் அவர்கள் ஆஜராகியும் , அரசு வழக்கறிஞர் எதிர்மனுதாரருக்காக ஆஜராகியும் இருதரப்பு வாதங்களையும் கேட்டு இன்று இந்நீதிமன்ற வழங்கும்

**<u>உத்தரவு</u>**

1. மனுதாரர் வழக்கு சொத்தின் உரிமையாளர் ஆவார் . மனுதாரருக்கு சொந்தமான TN 63 CD 0027 Hero Motocorp Splendor+ என்ற பதிவெண் கொண்ட வண்டியின் Chasis Number.MBLHAW478TSCD0855 Engine Number.HA11F7T5C01091 மீது குற்ற எண்.230/2026 பிரிவு 296(b), 115(2), 118(1), 351(3) BNS ன் கீழ் 02.05.2026 ம் தேதி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது . மேற்படி வண்டி திருப்புவனம் காவல் நிலையத்தார் வசம் இருந்து வருகின்றது . RC Book மனுதாரரின் கைவசம் உள்ளது என்றும் , அன்றைய தேதியிலிருந்து காவல்நிலையத்தின் பாதுகாப்பில் உபயோகப்படுத்தப்படாத சூழ்நிலையில் இருப்பதாலும், மழை, வெயிலில் நிறுத்திவைக்கப்பட்டிருப்பதாலும் திரும்ப இயக்க முடியாத நிலைக்கு போய்விடும் என்றும் , வாகனத்தை இடைக்கால பொறுப்பில் மனுதாரரிடம் ஒப்படைக்கக் கோரி பிரிவு 497 & 503 BNSS ன் படி மனுதாரரால் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இது குறித்து அரசு தரப்பு வழக்கறிஞருக்கும், காவல்துறையினருக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டு பதில் பெறப்பட்டது . அந்த பதிலுரையில் வழக்கின்

சொத்தை மனுதாரரிடம் ஒப்படைக்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. மேற்படி வழக்கு சொத்தை காவல்துறையினர் நீதிமன்றத்தில் சமர்பித்து P.R.No.65/2026 என பதிவு செய்து, நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

3. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம் இம்மனு அனுமதிக்கத்தகக்கதா? இல்லையா ? என்பதேயாகும்.

4. இருதரப்பும் கேட்கப்பட்டது . ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது . வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டும் , கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் வழக்கு சொத்தை மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

5. அசல் RC Book ஆவணத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

1.மனுதாரர் ரூ.50,000/-க்கு ஒரு பிணை ஆவணம் மனுதாரரே சொந்த பிணையில் எழுதிக் கொடுக்க வேண்டும். மேலும் ஒரு ஜாமீன்தாரருடன் மேற்படி தொகைக்கு பிணை ஆவணம் எழுதிக்கொடுக்க வேண்டும்.

2. மேற்படி வழக்கு சொத்தின் தன்வினைச் சான்றிட்ட புகைப்படங்களை, இந்தியசாட்சியசட்டம் பிரிவு 65(B) சான்றிதழுடன் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. மனுதாரர் மற்றும் வழக்கறிஞர் முன்னிலையில் பஞ்சநாமா தயார் செய்ய வேண்டும் என்றும், அதில் வழக்கறிஞர் மற்றும் மனுதாரர் கையொப்பம் செய்ய வேண்டும்.

4. இந்நீதிமன்ற விசாரணையின் போது, நீதிமன்றத்தில் வழக்கு சொத்தை ஆஜர்படுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தர் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஜீன் மாதம் 05-ம் நாள் வெள்ளிக்கிழமை திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VENKADESHPRASANTH

Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.06.05 17:50:51 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்